www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைத் தளபதி

# திரு. முகுந்தன்

# அளித்த பேட்டி

[சிங்கள இனவெறித் தீயில் ஈழத் தமிழினமே எரிகிறது. முதலாளித்துவ அரசு — பட்டாளம் — காவல் துறை மூன்றும் கை கோத்துக்கொண்டு தமிழர்களை அழிக்கின்றன; தமிழ்ப் பெண்களின் கற்பைச் சூறையாடுகின்றன.

இலங்கையில் தமிழினம் பூண்டோடு அழிந்து விடாமல் தப்ப வேண்டுமா? அதற்கு ஒரே வழி: 'தமிழீழம்' என்னும் தனிநாடு விடுதலை பெறுவது தான்.

அந்த உயரிய குறிக்கோளுக்காக உயிரைக் கொடுத்துப் போராடுகின்ற விடுதலைத்தளபதியாக விளங்குபவர் முகுந்தன் என்னும் உமா மகேசுவரன்.

கூரிய தொலைநோக்கு — சீரிய சிந்தனை — பகுத்தறிவுப் பார்வை — பாட்டாளி உணர்வு —சிக்கனப் பேச்சு—திட்டமிட்ட செயல்திறன் —இவற்றின் ஒட்டு மொத்த உரிமையாளராக உருவெடுத்திருப்பவர் முகுந்தன்.

அவரது எண்ண வீச்சுகளை வெளியிடுவதில் 'மக்கள் பாதை மலர்கிறது' மிக்க பெருமிதம் கொள்கிறது.

— ஆசிரியர்]

கேள்வி: உங்கள் உள்ளத்தில் விடுதலை வேட்கையை விதைத்தவராக எந்தத் தலைவரைக் குறிப்பிடலாம்?

முகுந்தன்: தந்தை செல்வா அவர்களே விடுதலை இயக்கத்தில் ஈடுபடும் ஆர்வத்தை எனக்கு அளித்தவர்.

கே :அவருடன் நீங்கள் நெருங்கிப் பழகியது உண்டா?

முகு:மிக நெருக்கமாகவே பழகியிருக்கிறேன். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அவர் இல்லத்திற்குச் சென்று அவரைச் சந்தித்திருக்கிறேன்; பேசியிருக்கிறேன்.

கே :உங்களை அவர் கவர்ந்ததற்குக் காரணம் என்ன என்று கூறலாமா?

முகு:இலங்கையில் மற்றத் தமிழர் தலைவர்கள் பலரும் பதவி வெறியர்களாகக் கொள்கையை உதறியபொழுது தந்தைசெல்வா மட்டும் தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடும் இலட்சியப் பாதையிலிருந்து இம்மியும் பிறழவில்லை. இங்கிலாந்துப் பேரரசியின் வழக்கறிஞர் என்னும் மிக உயர்ந்த 'குயூ. சி யாக இருந்த போதும் மிக எளிமையாகவே ஆணவம் இல்லாமல் அவர் பழகினர். எல்லாவற்றுக்கும் மேலாக—1948-ல் இலங்கை விடுதலை பெற்றவுடன் மலையகத் தோட்டத் தொழிலாளர்களான பத்து இலட்சம் தமிழரின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் சிங்கள ஆட்சியாளர்கள் பறித்த போதும் அவர்களுக்காக உரிமைக் குரல் எழுப்பிய ஒரே தலைவர் தந்தை செல்வா தான். அவரது அந்த இனப்பற்றும் இலட்சிய வெறியுமே என்னை மிகவும் கவர்ந்தன.

கே : அவர் காந்திய வழியில் தானே அறப்போர்களை நடத்தினர்? நீங்கள் ஏன் கருவிப் போரில் நம்பிக்கை வைக்கத் துணிந்தீர்கள்?

முகு: சிறீலங்கா இனவெறி ஆட்சியாளர்களின் சூழ்ச்சியான உரிமைப் பறிப்புகளே என் போன்ற ஈழத் தமிழ் இளைஞர்களைக் கருவிப் போரைத் தவிர வேறு வழியில்லை என்ற கடைசி நிலைக்குத் தள்ளியிருக்கின்றன. தந்தை செல்வா அவர்கள் காந்திய வழியில் தான் அமைதியான முறையில் அறப்போர்களை நடத்தினர்; உண்ணாநோன்புகளை மேற்கொண்டார். சிங்கள இனவெறி அரசுகளுக்கோ அவைகளின் அருமையோ மதிப்போ தெரியவில்லை. இராணுவத்தையும் காவல் துறையையும் ஏவிவிட்டு அவருடைய அறப் போராட்டங்களை ஒடுக்கினர்கள். தமிழர்களின் மொழி உரிமைகளை, அரசியல் உரிமைகளைப் படிப் படியாகப் பறித்துக் கொண்டே வந்தார்கள். 'சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்னும் சட்டத்தின் மூலம் தமிழ்மொழியின் தன்மானத்தையே தகர்த்தார்கள். கடைசியாக, 'தரப்படுத்துதல்' என்னும் சட்டத்தின் மூலம் தமிழ் இளைஞர்கள் பல்கலைக் கழகத்திற்குள்ளேயே நுழைய முடியாதபடி கல்வி வாய்ப்பையே அழித்தார்கள்; வேலைவாய்ப்புகளையும் பறித்தார்கள்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்னும் எத்தனையோ கொடுமைகள்! அவற்றையெல்லாம் எவ்வளவு நாளைக்குத் தான் பொறுப்பது? — எப்படித்தான் பொறுப்பது? எதிர்காலமே இருண்டு போகும்படி எல்லா வழிகளையுமே சிங்கள ஆட்சியாளர்கள் அடைத்துவிட்ட பிறகு எங்களுக்கு வேறு வழிதான் என்ன? 'மயிலே! மயிலே! இறகு போடு!' என்றால் அது தானாக இறகு போடுமா? அதுவும் சிங்கள மயிலோ மனச்சாட்சி என்பதே இல்லாத பொல்லாத மயில்! அதனிடம் காந்திய வழிமுறை எதுவும் எடுபடாது. அதனால்தான் சிங்கள இனவெறியரின் படுகொலைகளிலிருந்து தமிழினம் தப்பித்துத் தன்மானத்தோடு வாழவேண்டும் என்றால் கருவி ஏந்திப் போராடுவதைத் தவிர வேறு வழியே இல்லை என்று வீர

## கருவிப் போரில் நம்பிக்கை வைத்தது ஏன்?

முள்ள ஈழத் தமிழ் இளைஞர்கள் செய்தார்கள்; அவர்களே 'விடுதலைப் புலிகள்' ஆக மாறினார்கள்.

**கே :** அந்த 'விடுதலைப் புலிப் படையின் தலைவராக முதன்முதலாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர் நீங்கள்தான் என்று கூறப்படுகிறதே!

**முகு;** உண்மைதான்

**கே :** ஆனால் விடுதலைப் புலிகளுக்கிடையே பிறகு ஒற்றுமையில்லாமல் போனதன் காரணம் என்ன?

**முகு:** அணுகுமுறைதான் காரணம். தனிப்பட்ட மனிதர்களைப் பழிக்குப் பழி வாங்கிப் படுகொலை செய்வதால் தனி நாடு விடுதலை இலட்சியம் ஈடேறாது என்பது என் கருத்து. எனவே, தனிமனிதப் பயங்கரவாதத்தில் எனக்கு என்றுமே நம்பிக்கை இருந்ததில்லை. விடுதலை இயக்கம் என்பது எல்லாத் தரப்பு மக்களுமே எழுச்சி பெற்று இணைந்து போராடக் கூடிய — மக்கள் இயக்கமாக மாறவேண்டும். அந்த அடிப்படையில்தான் நானும் என் தோழர்களும் **'தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்'** என்னும் இயக்கத்தைத் தோற்றுவித்துப் போராடி வருகிறோம்.

**கே :** அண்மையில் இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலைபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**முகு:** அது சிங்கள அரசின் மேற்பார்வையில் நடைபெற்ற அப்பட்டமான தமிழ் இன ஒழிப்பு (GENOCIDE) தான். டாக்டர் இராசசுந்தரம், குட்டிமணி, செகன் முதலானவர்கள் சிறையிலேயே சிங்கள வெறியரால் கொல்லப்பட்டது உலக வரலாற்றிலேயே நடைபெறாத மனித வேட்டை. மனிதர்களின் குருதியைக் குடிப்பதில் இட்லரையும் மிஞ்சிவிட்டது செயவர்த்தனே அரசு.

**கே :** இந்தியவழித் தமிழர்களான மலையகத் தோட்டத் தொழிலாளர்களை — ஈழத் தமிழர்கள், குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்கள் மதிப்பதில்லை என்று கூறப்படுகிறதே!

**முகு:** பத்தாம்பசலிப் பழைமைவாதிகளும் பணச்செருக்கு உள்ளவர்களும் ஒரு காலத்தில் அப்படி முறைகேடாக நடந்திருக்கலாம். ஆனால், இன்றைக்கு அந்த நிலை அடியோடு மாறிவிட்டது. மலையகத் தமிழ் இளைஞர்களில் எத்தனையோ பேர் எங்கள் விடுதலை இயக்கத்தோடு, இணைந்து தோளோடு தோள்நின்று போராட முன்வந்திருக்கிறார்கள். 1948-ல் இந்தியவழித் தமிழர்களின் குடியுரிமையைச் சிங்கள ஆட்சி பறித்த போது அவர்களுக்கு ஆதரவாகத் தந்தை செல்வா குரல் கொடுத்தார். அந்த தமிழ்த் தொழிலாளிகளும் இலங்கை மண்ணுக்குச் சொந்தக்காரர்களே என்னும் எண்ணத்தில்தான் அவர் அப்படி ஆதரித்தார்.

**கே :** நீங்கள் சொல்வதிலிருந்து இரண்டு வகையான தமிழர்களுக்கும் இடையே இனி ஆழமான நல்லுறவு ஏற்படும் என எதிர்பார்க்கலாமா?

**முகு:** கண்டிப்பாக! இரு தரப்பினராகத் தமிழர்களைப் பிரித்து வைத்ததே சிங்கள ஆட்சியாளரின் சூழ்ச்சிதான். தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சியினர் உட்படப் பலரும் இந்தச் சூழ்ச்சியை முறியடிக்க ஏதும் செய்யாத நிலையில்—காந்திய இயக்கத்தினர் மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டத்தான் வேண்டும். இஞ்நீயர் எஸ். ஏ. டேவிட், டாக்டர் இராசசுந்தரம் ஆகியோர் மலையகத் தமிழரை மற்றத் தமிழர் பகுதிகளில் குடியேற்றி இணைத்து மாபெரும் தொண்டு செய்திருக்கிறார்கள்.

**கே :** ஆனால், இப்படி நாடற்ற ஏதிலிகளான தமிழர்களுக்கு முதன்முதலில் குடியேற்றங்களை ஏற்படுத்தியவர் நீங்கள்தான் என்று கூறப்படுகிறதே!

**முகு:** அதுவும் உண்மைதான். 1977 இனக் கலவரத்தில் சிங்களர்களால் கொடுமைகளுக்கு ஆளான மலையகத் தமிழர்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களுக்குத்தான் அவ்வாறு முதலில் குடியேற்றங்களை அமர்த்திக் கொடுக்க முற்பட்டோம். கே. சி. நித்தியானந்தம், பரராசசேகரன் என்னும் பேபி முதலானவர்களும் இந்த வகையில் அரும்பணி ஆற்றியதை மறக்க முடியாது.

கே: தமிழீழ விடுதலைக்குப் பாடுபடுவதாகத் திரு. அமிர்தலிங்கமும் கூறுகிறாரே!

முகு: அவர் வாய்ப்பந்தல் போடுவதில் மிகவும் வல்லவர். எங்கள் விடுதலை இலட்சியத்தையே காட்டிக் கொடுத்த 'புண்ணியவான்' அவர். 1977 பொதுத் தேர்தலுக்குப் பிறகு அவரது தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சி தடம்புரண்டு விட்டது. ஏழை, எளிய தமிழர்களை மறந்து முதலாளிகளின் நட்புமீது மோகங்கொண்டு அலையலாயினர் அக் கட்சியினர்.

கே: அப்படியானால் இந்தியத் தலைமையமைச்சர் இந்திராகாந்தியுடனும், செயவர்த்தனேயுடனும் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் நடத்தும் பேச்சுவார்த்தைகளால் தமிழீழ விடுதலைக்கு எந்தப் பலனும் இருக்கப்போவதில்லை என்கிறீர்களா?

முகு: கண்டிப்பாக எள்ளளவு பலனும் இருக்கப்போவதில்லை.

கே: அவர்மீது இந்த அளவுக்கு நீங்கள் நம்பிக்கை இழக்கக் காரணம் என்ன?

முகு: அவரது முரண்பாடான சொல்லும் செயலும்தான். எல்லா உரிமைகளையுமே பறித்துக்கொண்டு தமிழர்களை இரண்டாந்தரக் குடிமக்கள் ஆக்கிவிட்ட சிங்கள ஆட்சியிடமிருந்து அறப்போராட்டங்கள் மூலம் எந்த நீதியும் கிடைக்காது என்று அனுபவம் மூலம் நாங்கள் உணர்ந்த பிறகுதான் 'விடுதலைப் புலிகள்' அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. அதன் முதல் தலைவனாக நான்தான் இருந்தேன். புலிகள் இயக்கம் தலைமறைவு (UNDER GROUND) இயக்கமாகவும் அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சி வெளிப்படையான இயக்கமாகவும் செயற்படுவது என்று ஒப்புக்கொண்டோம். ஆனால், அமிர்தலிங்கம் கட்சியோ சிங்கள ஆளும் கட்சியோடு சமரசப் போக்கை மேற்கொண்டது. அதனால்தான் முன்பு நான் சொன்னதைப்போலத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைத் தோற்றுவித்துக் கொண்டோம். அதன் பிரிவாகப் 'புலிகள் இயக்கம்' என்பதும் இருக்கிறது. அமிர்தலிங்கம் மட்டும் ஒப்புக்கொண்டபடி நடந்திருந்தால் எங்கள் தமிழீழ விடுதலை இந்த அளவுக்குப் பின்னடைந்து இருக்காது.

கே: இன்றைய நிலையில் இந்திய அரசு என்ன செய்யவேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்?

முகு: முதல் நடவடிக்கையாக — ஐக்கிய நாடுகள் மன்றத்தின் அமைதிப் படையை இலங்கைக்கு அனுப்பிப் படுகொலைகளை நிறுத்தச் செய்ய இந்தியா முனைய வேண்டும். பாலத்தீன விடுதலைக்கும் நமீபிய விடுதலைக்கும் குரல் கொடுப்பதைப் போல ஐ.நா. பாதுகாப்புக் குழுவில் எங்கள் தமிழீழ விடுதலைக்காகவும் குரல் எழுப்ப வேண்டும்.

## விடுதலை இலட்சியத்தைக் காட்டிக் கொடுத்த அமிர்தலிங்கம் பேச்சு பயனற்றது.

கே: ஈழ விடுதலைப் போராளிகளுக்குப் படைக் கருவிகள் தந்து உதவ வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்க வில்லையா?

முகு: நிச்சயமாக இல்லை. எங்கள் எதிரிகளுக்கு ஆயுதங்களைத் தராமல் இருந்தாலே போதுமானது. புரட்சியை இறக்குமதி செய்யமுடியாது. எங்கள் விடுதலையை நாங்கள்தாம் போராடிப் பெறவேண்டும்.

கே: இந்திய விடுதலை பெருத்த ஏமாற்றத்திலேயே முடிந்திருக்கிறது. வெள்ளைக் காரர்கள் அடித்த கொள்ளைகளையெல்லாம் வெல்லும் வகையில் உள்ளூர்க் கொள்ளைக் காரர்கள் இந்தியப் பொருளாதாரத்தையே ஏப்பம்விட்டுச் சுரண்டிக் கொழுத்து விட்டார்கள். எதிர்காலத்தில் தமிழீழம் தனிநாடாக அமையும்போது இத்தகைய



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுரண்டலுக்கு இடம் தராத ஆட்சி அமைப்பு பற்றி உங்கள் கருத்து என்ன?

முகு: விடுதலை பெற்ற எங்கள் தமிழீழம் சனநாயகச் சமதருமக் குடியரசாகவே அமையும்: அதில் சுரண்டல் என்ற பேச்சுக்கே இடம்இராது. தேசிய முதலாளிகளின் சொத்துகள், தொழிற் சாலைகள் எல்லாவற்றுக்கும் உச்சவரம்பு வரையறுக்கப்படும். ஆனால், இன்றைய போராட்டக் கட்டத்தில் சிங்கள வெறி பிடித்த முதலாளித்துவ ஆட்சியிட மிருந்து தமிழர்களை மீட்டுத் தனிநாடு விடுதலை பெற இன எழுச்சியே எங்களுக்குத் தேவைப்படுவது. அதற்காக எல்லாச் சக்திகளையுமே இணைத்துக் கொண்டு செயல்பட வேண்டியுள்ளது.

கே: தனிநாடு கேட்காமல் சிங்களரோடு இலங்கைத் தமிழர்கள் சேர்ந்து வாழ்வதே சிறந்தது என்று இங்கே சிலர் பேசுகிறார்களே — எழுதுகிறார்களே?

முகு: தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும். அவர்களுடைய குடியுரிமை, வாக்குரிமை, மொழியுரிமை எல்லாமே பறிக்கப்பட்டிருந்தால் — அவர்களுடைய உற்றார் உறவினரை வெட்டி உடல் சதைக்கே விலை பேசியிருந்தால் — அவர்களுடைய வீடுகளை எரித்து வீதிகளிலே அநாதைகளாக அலைய விட்டிருந்தால் — அவர்களுடைய குடும்பப் பெண்களைக் கற்பழித்துக் கழுத்தை நெரித்துக் கொன்றிருந்தால்— அவர்கள் இவ்வளவு 'ஒற்றுமை உபதேசம்' செய்யமாட்டார்கள். எங்களைப் பொறுத்து இனி எந்தக் காலத்திலும் சிங்களர்களுக்கு அடிமைகளாகச் சேர்ந்து வாழவே முடியாது. தமிழீழ விடுதலை ஒன்றே தமிழினத்தின் தன்மானத்தைக் காக்க வழி!

கே. செயவர்த்தனே தாமாகத் தமிழீழம் தருவார் என எதிர்பார்க்கிறீர்களா?

முகு: அந்த அளவுக்கு அவர் உயர்ந்த மனிதர் அல்லர். நாங்களாகவே தான் எங்கள் தமிழீழத்தை வென்றெடுக்கப் போகிறோம்.

★

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், பாட்டாளி உணர்விலேயே ஊறித் திளைக்கும் அவரது பாடல் வரிகள் நம் நெஞ்சக் கடலில் அலைகளாக ஆர்ப்பரிக்கின்றன.

''காலுக்குச் செருப்பும் இல்லை
கால் வயிற்றுக் கூழும் இல்லை
பாழுக் குழைத்தோமடா
— என் தோழனே
பசையற்றுப் போனோமடா?''

பகுத்தறிவு என்னும் பதப்பட்ட கழனியில் பொதுவுடைமை என்னும் தங்கச்சம்பா நெற்பயிர் தழைத்து விளையும்.

சாதிகளின் தாயான சமயப் பூச்சிகளைக் கொல்லாவிட்டால் பொதுவுடைமைப் பயிரைக் காக்க முடியாது.

எனவேதான், தமிழ்நாட்டைப் பொறுத்த வரை பெரியாரின் பகுத்தறிவு மண்ணில் காரல் மார்க்சின் பொதுவுடைமைப் பயிர் பூத்துக் குலுங்கிப் பொன்மணிகளை ஈனவேண்டும் என்பது என் தணியாத தாகம்.

## எது கோழைத்தனம்?

**சரியானது எது என்று தெரிந்த பிறகும் அதைச் செய்யாமல் இருப்பது தான் மிகப் பெரிய கோழைத்தனம்.**

—கன்பூசியஸ்.

தமிழகப் பொதுவுடைமைச் சிற்பிகளில் ஒருவரான தோழர் சீவா அவர்களும் எத்தகைய சமய வெறுப்பைக் காட்டுகிறார் பாருங்கள்:

''இன்றுவரை மதத்தால்
கஷ்டம் தீர்ந்ததோ
எண்ணிக் கடைத்தேறுங்கள் — இனி
நன்றுற வேண்டின் உழைப்பாளரே மதம்
நாசம்உறக் கூறுங்கள்!''

தோழர் சீவா அவர்களின் எண்ணப்படியே பகுத்தறிவுத் தண்டில் பொதுவுடைமைச் சுடரை எரியவிடுவோம்!

●



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்